## தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்றுவிப்பு அதிகார சபை - 2018

---

### 1.1 மறுதலிப்பு அபிப்பிராயம்

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்றுவிப்பு அதிகார சபையின் 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று,தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள்இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கவேண்டுமென கருதுகின்ற எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகின்றது.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தாக்கங்கள் காரணமாக தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்றுவிப்பு அதிகார சபையின் 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 மறுதலிப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தாக்கங்கள் காரணமாக தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்றுவிப்பு அதிகார சபையின் நிதிக் கூற்றுகள் இலங்கை அரச துறை கணக்கீட்டு தரநியமங்களின்படி உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது மறுதலிப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகார சயையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகார

சபையைகலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கல்வி நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக அதிகார சபையின்உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு அதிகார சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகார சபைக்குள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகார சபையின்தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து அதிகார சபையின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல்,முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது அதிகார சயைின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.

- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,

- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக் கூற்றுகள்

---------------------

### 1.5.1 நிதிக் கூற்றுகள் தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

---------------------------------------------------------------------------------

கொடுக்கல்வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான‘‘சிறப்பாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை அதிகார சபையால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும்.பொது பேரேடு,நாட்குறிப்பேடு, குறிப்பேடு வவுச்சர், கொடுப்பனவு வவுச்சர் ஆகிய பிரதான கணக்கீட்டு அறிக்கைகளை பேணிச் செல்லுதல் தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புகள் பின்வரும் தலைப்புகளின்கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.5.2. இலங்கை அரச துறை கணக்கீட்டு தர நியமங்களுக்கு இணங்கியொழுகாமை

-----------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| உரிய தரத்திற்கு தொடருடன் இணங்கியொழுகாமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ)இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு தரநியமங்களின் 07 இல் 47 ஆவது பந்தி பிரகாரம் சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் உருப்படிகள் ஒவ்வொரு 3 ஆண்டுகள் அல்லது 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை மீள்கணிப்பீடு செய்தல் வேண்டுமாயினும், நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ள செலவு ரூபா.3,406,430,802 ஆன சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் அதிகார சபையால் ஆரம்பம் தொடக்கம் மீள்கணிப்பீடு செய்யப்படவில்லை. | 2020 ஆம் ஆண்டில் வாகனங்களின் மீள்கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. ஏனைய சொத்துக்கள் 2020 ஆம் ஆண்டில் வருடாந்த பொருட் மீளாய்வின்போது மீள்கணிப்பீடு செய்யப்படுவதுடன், காணி மற்றும் கட்டிடங்கள் மதிப்பீட்டு திணைக்களம்மூலம் எதிர்வரும் காலங்களில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | இலங்கை அரச துறை கணக்கீட்டு தர நியமங்களுக்கு ஒழுங்கமைதல் வேண்டும். |
| (ஆ) இலங்கை பொது துறை கணக்கீட்டு நியமங்கள் 07 இல் 65 ஆவது பந்தி பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யாமை காரணமாக செலவினம் ரூபா.118,901,800தொகையிலான மோட்டார் வாகனங்களை முற்று முழுதாக தேய்மானம் செய்திருப்பினும், மேலும் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி ஏற்பட்ட மதிப்பிடப்பட்ட குறைப்பாடு இலங்கை அரச துறை கணக்கீட்டு தரநியமம் 03 பிரகாரம் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | தற்போது அதிகார சபைக்குரிய எல்லா வாகனங்களையும் மீள்கணிப்பீடு செய்துள்ளதுடன், 2020 இறுதி கணக்குகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | இலங்கை அரச துறை கணக்கீட்டு தர நியமங்களுக்கு ஒழுங்கமைந்து நிதிக் கூற்றுகளை தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) ஒப்பந்த அடிப்படையின் மீது ஆட்சேர்ப்புச் செய்திருந்த விரிவுரையாளர் ஒருவர் சேவையிலிருந்து நீங்கியமைக்கு ஏற்புடையதாக செலுத்தப்பட வேண்டியிருந்த ரூபா.3,875,000 ஆன நட்டஈடு பணம் தொடர்பாக அரச துறை கணக்கீட்டு தரநியமங்களின் 08 இல் 34 ஆவது பந்தி பிரகாரம் வெளிப்படுத்தப்படவில்லை. | அந்த வழக்கு தொடர்பான தீர்ப்பு 2019 ஆம் ஆண்டு மே மாதம் 02 ஆந் திகதி கிடைக்கப்பெற்றுள்ளதால், 2018 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுளில் காண்பிப்பதற்கு முடியவில்லை. | இலங்கை அரச துறை கணக்கீட்டு தர நியமங்களுக்கு ஒழுங்கமைந்து நிதிக் கூற்றுகளை தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஈ)இலங்கை அரச துறை கணக்கீட்டு தர நியமங்கள் 12 இன்படி குத்தகை சொத்துக்களை, நிதிசார் கூற்றுகளில் தனிப்பட்ட சொத்துக்களிலிருந்து புறம்பாக காண்பிக்கப்படுதல் வேண்டுமாயினும், அதிகார சபையால் நீண்டகால குத்தகை அடிப்படையின்மீது கொள்வனவு செய்திருந்த ரூபா.72,600,542 பெறுமதியான குத்தகை காணிகள், காணிகளின்கீழ் காட்டப்பட்டிருந்தது. | 2019 கணக்குகளை தயாரிக்கும்போது செவ்வையாக்குவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | இலங்கை அரச துறை கணக்கீட்டு தர நியமங்களுக்கு ஒழுங்கமைந்து நிதிக் கூற்றுகளை தயாரிக்கப்படுதல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைப்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ)மீளாய்விற்கான ஆண்டில் குத்தகை காணிகளின் பொருட்டு ரூபா.452,458ஐ கடன்தீர்ப்பாக கணக்கிடப்பட்டிருப்பினும், அந்த காணி கடன்தீர்ப்பு கணக்கீட்டு கொள்கை நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தவில்லை. | 2019 கணக்குகளை தயாரிக்கையில் செவ்வையாக்கப்படும் | சரியாக நிதிக் கூற்றுகளில் கணக்கு கொள்கைகளை வெளிப்படுத்தல் வேண்டும். |
| (ஆ) அதிகார சபையின் நிதியங்களில் மீளாய்விற்கான ஆண்டில் கொள்வனவு செய்திருந்த பெறுமதி ரூபா.26,172,364 ஆன சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் குறைப்பாடுகளுடன் கூடியதாக அரச அளிப்புகளாக கருதி கடன்தீர்ப்பு செய்தல் காரணமாக ஆண்டொன்றுக்கு ஏற்புடையதான பிற்போடப்பட்ட வருமானம் ரூபா. 6,164,341 ஆல் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | இது தொடர்பாக கண்டறிவதற்கு தேவையான செவ்வைப்படுத்தல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | இலங்கை அரச துறை கணக்கீட்டு தர நியமங்களுக்கு ஒழுங்கமைதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை 07 பயிற்சி நிலையங்களுக்கு ஏற்புடையதாக மீளாய்விற்கான ஆண்டில் செலுத்தப்பட்டிருந்த ரூபா.1,529,672 அன குத்தகை செலவினம் கடந்த காலத்திற்கு ஏற்புடையதாக சீராக்குதலுக்குப் பதிலாக மீளாய்விற்கான ஆண்டில் செலவினமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. அதேபோன்று 2019 ஆம் ஆண்டின் பொருட்டு செலுத்தப்பட்ட ரூபா.200,000 ஆன வாடகை முன் செலுத்தப்பட்ட கொடுப்பனவாக கணக்கு வைப்பதற்குப் பதிலாக மீளாய்விற்கான ஆண்டில் செலவினமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | ரூபா 1,259,672 ஆன தொகை செலுத்தப்பட வேண்டுமென அடையாளம் காணப்பட-வில்லை என்பதுடன், அவ்வா-றான பிழைகள் இதன் பின்னர் ஏற்படாதிருப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்-ளப்படும். 2019 ஆம் ஆண்டின் பொருட்டு செலுத்-தப்பட்ட ரூபா.200,000 தொ-கைக்கான ஜர்னல் குறிப்பு-கள்மூலம் இதற்கு முன்ன-ரான இலாபத்திற்கு சீராக்கப்பட்டுள்ளது. | ஆண்டுக்கான எல்லா செலவினங்களையும் அடையாளம் காணப்-பட்டு செவ்வையாக கணக்குகளை தயாரித்-தல் வேண்டும். |
| (ஈ) 2017 ஆம் ஆண்டுக்கு ஏற்புடைதாக 2018 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா. 949,587 ஆன பல்வேறு செலவினம் மற்றும் ரூபா. 872,506பயணச் சீட்டு கட்டணங்கள் கடந்த ஆண்டில் இலாபத்திற்கு சீராக்குவதற்குப் பதிலாக மீளாய்விற்கான ஆண்டில் செலவினமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | எதிர்வருங் காலங்களில் இவ்வாறான பிழைகள் ஏற்படாதிருப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.. | ஆண்டுக்கான எல்லா செலவினங்களையும் அடையாளம் காணப்-பட்டு செவ்வையாக கணக்குகளை தயாரித்-தல் வேண்டும். |
| (உ)ஒருகொடவத்தை கைத்தொழில் பொறியியலாளர் பயிற்சி நிறுவனம் பேணிச் சென்ற மதிப்பீட்டு பெறுமதி ரூபா. 181,000,000 ஆன ஹெக்டயார் 1.5951 காணிப் பகுதி மற்றும் புத்தகப் பெறுமதி ரூபா.305,486,464 ஆன கட்டிடங்களின் ஒரு பகுதி 2015 ஆம் ஆண்டில் களனி பாலத்தின் கருத்திட்டத்திடம் சுவிகரிக்கப்-பட்டிருப்பினும், அந்த காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதிகள் அடையாளம் காணப்பட்டு கணக்குகளில் அகற்றுவறத்கு மீளாய்விற்கான ஆண்டு இறுதி வரை நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. அதேபோன்று கையளிக்கப்பட்ட காணிக்-குப் பதிலாக 2015 ஆம் ஆண்டில் அதிகார சபையிடம் வழங்கியிருந்த புத்தகப் பெறுமதி ரூபா. 202,278,159 காணியினை மதிப்பீடு செய்து கணக்கு வைக்கப்படவில்லை. மேலும் அகற்றப்பட்ட கட்டிடங்களுக்குப் பதிலாக ரூபா.1,539,821,351 ஐ செலவிடப்பட்டு மேற்படி கருத்திட்டத்தில் நிருமாணிக்க-ப்பட்டு 2017 ஆம் ஆண்டில் அதிகார சபையிடம் கையளிக்கப்பட்டிருந்த மற்றும் தற்போது பயன்படுத்துகின்ற கட்டிடங்களில் பெறுமதி மீளாய்விற்கான ஆண்டு இறுதி வரை கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | 2015 ஆண்டில் களனி பாலம் கருத்திட்டத்தின் காணிகள் கட்டிடங்கள் சுவீகரித்துக்-கொள்ளுதல் தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்-வதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் விடயங்-களை வினவியுள்ளதுடன், 2019 ஆம் ஆண்டின் இறுதி கணக்குகளை தயாரிக்-கையில் செவ்வையா-க்கப்படும். | சொத்துக்கள் அகற்றல் மற்றும் சேர்க்கப்படுதல் செவ்வையாக கணக்கு வைத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஊ) ஒருகொடவத்தை மோட்டார் வாகன பொறியியற் பயிற்சி நிறுவனம் நிருமாணிக்கும்போது குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொண்டிருந்த காணியில் மதிப்பீட்டு பெறுமதி ரூபா. .231,000,000 ஆன பகுதி 2016 ஆம் ஆண்டில் அணுசக்தி அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், அதற்குப் பதிலாக மதிப்பீட்டு பெறுமதி ரூபா. .119,000,000 ஆன காணிப் பகுதி ஹல்பராவ பிரதேசத்திலிருந்து கிடைக்கப்பெற்றிருந்தது. அது 2017 ஆம் ஆண்டு பெப்ருவரி 02 ஆந் திகதி தொடக்கம் பயன் கொண்ட போதிலும் அந்தக் காணியின் பெறுமதி கணக்கு வைப்பதற்கு அல்லது அகற்றப்பட்ட காணியில் பெறுமதி கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | 2019 இறுதி கணக்குகளை தயாரிக்கும்போது செவ்வையாக்கப்படும். | சொத்துக்கள் அகற்றல் மற்றும் சேர்க்கப்படுதல் செவ்வையாக கணக்கு வைத்தல் வேண்டும். |
| (எ) சேர்க்கப்பட் பெறுமதி ரூபா. 630,642,234 ஆன ஜப்பன் மற்றும் மேற்கு ஜெர்மன் நிதி உதவியின்கீழ் பல ஆண்டுகளுக்கு முன்னர் நிருமாணிக்கப்பட்டிருந்த ஒருகொடவத்தை மற்றும் கட்டுபெத்த பொறியியல் பயிற்சி நிறுவனங்களில் கட்டிடங்கள் வருடாந்தம் தேய்மானம் செய்திருப்பினும், முறையான அடிப்படையின்கீழ் பிற்போடப்பட்ட வருமானமாக அடையாளம் காணப்படாது ஒதுக்கத்தின்கீழ் காட்டப்பட்டிருந்தது. | 2019 இறுதி கணக்குகளை தயாரிக்கும்போது செவ்வையாக்கப்படும். | இலங்கை அரச துறை கணக்கீட்டு தர நியமங்களுக்கு ஒழுங்கமைந்து நிதிக் கூற்றுகளை தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஏ) ஒருகொடவத்தை பொறியியல் பயிற்சி நிறுவனம் தாபிக்கையில், பூமிக்கு பொருத்தப்பட்டிருந்த உபகரணங்கள் அழிவிற்கு உட்பட்டிருந்தமையால், அதன் பொருட்டு 2017 ஆம் ஆண்டில் களனி பாலக் கருத்திட்டத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற ரூபா.44,628,721 பெறுமதியான உபகரணங்ளை கணக்கு வைப்பதற்கும் அழிவடைந்த உபகரணங்களின் பெறுமதியை அடையாளம் காணப்பட்டு கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | 2019 ஆம் ஆண்டில் கணக்கு வைக்கப்பட்டுள்ளது. | சொத்துக்கள் அகற்றல் மற்றும் சேர்க்கப்படுதல் செவ்வையாக கணக்கு வைத்தல் வேண்டும். |
| (ஐ)2016 ஆம் ஆண்டில் பயிலுநர்களை பயிற்றுவிப்பதன் பொருட்டு அரச நிறுவனமொன்றிடமிருந்து கிடைக்கப்பெற்ற ரூபா.8,812,500தொகை உரிய பணியின் பொருட்டு செலவிடப்பட்டிருப்பினும், அந்த பணத் தொகையினை மேலும் வைப்புகளாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை | கிடைக்கப்பெற்ற பணம் செலவிடுகையில், செலவிடும் ஆண்டில் வருமானமாக அடையாளம் காணப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஒ) மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதாக, பணிக்கொடை ஒதுக்கீடுகளை கணக்கிடும்போது, பிழையாக கணக்கிட்டதன் காணரமாக மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதாக பணிக்கொடை ஒதுக்கீடு செய்தல் மற்றும் திரட்டிய ஒதுக்கீடுகள் ரூபா.30,014,189 ஆல் குறைவாக நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2019 ஆண்டின் கணக்குகளில் செவ்வையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | காலப் பகுதிக்கு ஏற்புடையதாக பணிக்கொடை ஒதுக்கீடு செய்கையில் செவ்வையாக கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். |
| (ஓ) மீளாய்விற்கான ஆண்டில் அதிகார சபையின் சேவையில் ஓய்வு பெற்றிருந்த நான்கு அலுவலர்களின் பொருட்டு செலுத்தப்பட வேண்டிய ரூபா.2,206,047 ஆன பணிக்கொடை தொகை, ஆண்டில் கடன் அடிப்படையில் பெற்றுக்கொண்டிருந்த ரூபா.428,500 ஆன மூலதன உபகரணங்கள் மற்றும் மேற்கொள்கின்ற வேலைகளின்கீழ் செலுத்தப்பட வேண்டிய ரூபா.1,912,854 தொகை கணக்கு வைக்கப்படவில்லை. | இணங்குகின்றேன். எதிர்வருங் காலங்களில் இவ்வாறான பிழைகள் ஏற்படாதிருப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | காலப் பகுதிக்கு ஏற்புடையதான சொத்துக்கள், பொறுப்புகள், வருமானங்கள் மற்றும் செலவினங்கள் அடையாளம் காணப்பட்டு செவ்வையாக கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். |
| (ஔ) 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் பயிற்சி நுகர்வோர் பொருட்கள் மற்றும் நாளாந்த அறிக்கை புத்தகங்களின் இறுதி தொகை ஒழுங்கு முறையில் ரூபா.12,370,230 ம் மற்றும் ரூபா. 2,268,602 குறைவாக நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை | கணக்கிடப்பட்ட இறுதி இறுப்புகளை செவ்வையாக கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். |
| (க) 2017 ஆண்டுக்கு ஏற்புடையதாக ரூபா.9,583,231ஆன அட்டுறு செலவினம் மிகை ஒதுக்கீடுகளின் பொருட்டு சீராக்குதல் மேற்கொள்ளாமை காரணமாக நடைமுறை பொறுப்புகள் அதிகமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன். எதிர்வருங் காலங்களில் இவ்வாறான பிழைகள் ஏற்படாதிருப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிதிக் கூற்றுகளை தயாரிக்கும்போது ஆண்டுக்கு ஏற்புடைதான எல்லா வருமானம் மற்றும் செலவினங்களை செவ்வையாக அடையாளம் காணபபட்டு கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு ஒழுங்கமையாமை**

பின்வரும் ஒழுங்கமைவுகள் அவதானிக்கப்படவில்லை.

| சட்டங்கள், ஒழுங்கு-விதிகள் என்பவற்றின் தொடர் | ஒழுங்கமையாமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோச-லிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவை | | | |
| I. நிதி ஒழுங்குவிதி 371,371(2) பிரிவுகள் மற்றும் 2015 யூலை 14 திகதிய 2015/ 3 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | ஏதேனும் குறித்த பணிக்காக வழங்கிய நிமித்த கட்டுநிதி உரிய பணி முடிவடைந-தவுடன் தீர்க்கப்படுதல் வேண்டுமாயினும், 2017 ஆம் ஆண்டுக்கு முன்னர் தொட-க்கம் இருந்து வரும் தீர்க்கப்படாத முற்பணங்-களின் மீதி ரூபா.5,031,401ஆகும். | செவ்வையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்கின்றேன். | தொடர்புடைய ஒழுங்குவிதிகள் மற்றும் சுற்றறிக்கை பிரகாரம் நடவடி-க்கை மேற்கொள்-ளுதல் வேண்டும். |
| II. நிதி ஒழுங்குவிதி115 (4) பிரிவு | முன்னரான நிதி ஆண்டுக்கு முந்தைய நிதி ஆண்டுக்கு ஏற்புடையதான ஒவ்வொரு உரித்துகளுக்கும் கொடுப்ப-னவுகளை மேற்கொள்வதற்கு முன்னர் தலைமை கணக்கு கொடுக்கும் அலுவலரின் அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டுமாயினும்,அதற்கு முரணாக 2016 மற்றும் 2017 ஆண்டுகளுக்கு ஏற்புடைய-தாக ரூபா.567,000 ஆன வாடகை மீளாய்விற்கான ஆண்டில் செலத்தப்பட்டிருந்தது. | செவ்வையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்கின்றேன்.. | தொடர்புடைய ஒழுங்குவிதிகள் மற்றும் சுற்றறிக்கை பிரகாரம் நடவடி-க்கை மேற்கொள்-ளுதல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதிசார் விளைபயன்**

மீளாய்விற்கான ஆண்டில் தொழில்பாட்டு விளைபயன் ரூபா. 16,887,271 ஆன மிகை காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்ததாக கடந்த ஆண்டின் பற்றாக்குறை ரூபா. 143,056,895 ஆகும். அதன்படி நிதிசார் விளைபயனில் ரூபா. 159,944,166 ஆன வளர்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வளர்ச்சிக்கு தொழில்பாட்டு வருமானம் மற்றும் ஏனைய வருமானங்களின் அதிகரிப்பு பிரதான காரணங்களாகின.

## 3. தொழில்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| அதிகார சபையின் சுத்திகரிப்பு நடவடிக்கை-களின் பொருட்டு வழங்குநர் ஒருவரை தெரிவு செய்து கொள்வறத்கு கிடைக்கப்பெற்றிருந்த விலை கணக்கு-களுக்கிடையில் ஆகக் குறைந்த விலை மனு சமர்ப்பித்தவருடன், கலந்துரையாடப்பட்டு நிபந்தனைகள் தொடர்-பான இணக்கப்பாட்டுக்கு வரும் ஆற்றல் இருக்கையில் அதனை கவனத்தில் கொள்-ளாது இரண்டாவது ஆகக் குறைந்த விலை கணக்குடன்கூடிய விலை மனுதாரரை தெரிவு செய்த காரணத்தால் ஆண்டொன்றுக்கு ரூபா.5,065,860 அளவிலான நிதிசார் நட்டம் ஏற்படுவதாக அவதானிக்கப்பட்டது. | பதில் வழங்கப்படவில்லை. | பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்கையில் பெறுகை நடைமுறைகளை பின்பற்றுதல் வேண்டும். |

### 3.2 தொழில்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| உடன்படிக்கை மீது ஆட்சேர்ப்புச் செய்த விரிவுரையாளரது சேவையினை நிறுத்திய-தற்கு எதிராக அவரால் தொடரப்பட்டிருந்த வழக்கின் தீர்ப்பு படி அந்த விரிவுரை-யாளரின் சேவைக் காலம் நீடிக்கும்போது, சேவை இடைநிறுத்தப்படாது சேவை உடன்-படிக்கைகளை மேற்கொண்டிருந்த படியால் அதிகார சபை ரூபா. 3,875,000 ஆன நட்டஈட்டு தொகை வழங்க நேரிட்டது. | பதில் வழங்கப்படவில்லை. | உடன்படிக்கைகளை மேற்-கொள்ளும்போது சட்டத்து-டனான ஆலோசனைகளை பெற்றுக்கொண்டு பணியா-ற்றுதல் வேண்டும். |

## 3.3 நிதியத்தின் குறைந்த பயன்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) பல ஆண்டுகளுக்கு முன்னர் பகுதிநேர பயிற்சி கற்கைநெறி வருமானங்களில் நிலையான வைப்புகளில் முதலீடு செய்திருந்த ரூபா. 33,911,384 ஐ அந்த கற்கை நெறிகளை மேம்படுத்துவதற்கு பயன்படுத்தாது அதிகார சபையின் பல்வேறு பிரிவுகளிடம் விநியோகிப்பதற்கு 300 கணினிகளை கொள்வனவு செய்வதற்கு செலவிடப்பட்டிருந்தது. | கட்டுப்பாட்டுச் சபையின் அனுமதி கிடக்கப் பெற்றுள்ளது. | பயிலுநர்களிடம் அறவிடப்படும் பணத் தொகையினை அவர்களின் பயிற்சி நடவடிக்கைகளை மேம்படுத்தும் பொருட்டு செலவிடுவதற்கு கவனம் செலுத்தல் வேண்டும். |
| (ஆ) நிலையான வைப்புகளில் முதலீடு செய்திருந்த மாணவர்களின் நலனோம்பல் மற்றும் கற்கை நெறிகளை மேம்படுத்துவதற்கான ரூபா. 1,515,000 தொகை மற்றும் பகுதிநேர கற்கைநெறிகளுக்குரிய ரூபா.3,088,910 தொகை மீள பெற்றுக்கொண்டு அதிகார சபையின் உபயோகத்திற்கு மூலதன உருப்படிகளை கொள்வனவு செய்வதற்கு செலவிடப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | நிலையான வைப்புகளை மீள பெற்றுக்கொள்வறத்கு மட்டும் நிருவாக சபையின் அனுமதி கிடைக்கப்பெற்றிருந்தது. ஆயினும் பயிலுநர்களிடமிருந்து அறவிடப்படும் பணத் தொகையானது,அவர்களை பயிற்றுவிக்கும் நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தல் வேண்டும். |

## 3.4 பயனற்ற அல்லது குறைந்த பயன்பாட்டுடன்கூடிய சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ)அடிப்படை சாத்தியவள கற்கைகளை மேற்கொண்டதன் பின்னர் பொறியியலாளர் தொழில்நுட்ப நிறுவனம் தாபிப்பதற்காக மூடப்பட்ட பாடசாலை கட்டிடங்கள் 2018 ஆம் ஆண்டில் ரூபா. 8,185,249 செலவிடப்பட்டு நவீனமயப்படுத்தப்பட்டது. குறித்த பட்டிடங்கள் பயன்படுத்தாது கைவிடப்பட்டிருந்தமை 2019 யூலை 19 ஆந் திகதி மேற்கொண்ட பௌதீக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | இந்தக் கட்டிடம் கட்டுப்பாட்டுச் சபையின் அனுமதிக்கு அமைவாக தென் மாகாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையிடம் வழங்குவதற்கு தற்போது கலந்துரையாடப்படுகிறது. | பயனற்ற அல்லது குறைந்த பயன்பாட்டுடன்கூடிய சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றை துரிதமாக அடையாளம் காணப்பட்டு பயனுள்ள அலுவல்களின் பொருட்டு பயன்படுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) கட்டுபெத்த கைத்தொழில் பொறியியலாளர் பயிற்சி நிறுவனத்தின் பயிலுநர்களால் உற்பத்தி செய்கின்ற தளவாடங்களை விற்பனை செய்யும் நோக்கில் 2014 மற்றும் 2016 ஆகிய காலப் பகுதிக்குள் ரூபா. 18,847,771 செலவிடப்பட்டு நிறுவனத்தின் நிலப் பகுதியில் கண்காட்சிகூடம் நிருமாணிக்-கப்பட்டிருப்பினும், அந்தக் கட்டிடம் 2020 சனவரி மாதம் வரை பயன்பாடின்றி பயனற்று இருந்தமை அவதானிக்கப்பட்டது. | இங்கு ஜப்பான் மொழி நிலையமொன்றை நடா-த்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. | பயனற்ற அல்லது குறைந்த பயன்பாட்டுடன்கூடிய சொத்து-க்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவ-ற்றை துரிதமாக அடையாளம் காணப்பட்டு பயனுள்ள அலுவ-ல்களின் பொருட்டு பயன்ப-டுத்தல் வேண்டும். |
| (இ) 2018 நவம்பர் 18 ஆந் திகதி தனியார் தொலைபேசி நிறுவனத்தால் அதிகார சபையிடம்Huawei வகையிலான 450Tab கணினிகளை அன்பளிப்பு செய்திருந்த-துடன், அதில் ரூபா. 1,626,400 பெறுமதியான 16Tab கணினிகள் 2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் 15 ஆந் திகதி வரை வழங்கப்படாது பிரதான களஞ்சிய-த்தில் வைக்கப்பட்டிருந்தது. | அன்பளிப்பாக கிடைக்கப்-பெற்ற 450Tab கணினி-களில் 434 வழங்கப்பட்டி-ருந்ததுடன், அதில் 16Tab கணினி இயந்திர-ங்கள் தேவைகளை அடையளாம் காணும் வரை களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன. | பயனற்ற அல்லது குறைந்த பயன்பாட்டுடன்கூடிய சொத்து-க்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவ-ற்றை துரிதமாக அடையாளம் காணப்பட்டு பயனுள்ள அலுவ-ல்களின் பொருட்டு பயன்ப-டுத்தல் வேண்டும். |

### 3.5 கொள்வனவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கிளிநொச்சி தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்றுவிப்பு அதிகார சபையின் இலங்கை ஜெர்மன் தொழிநுட்ப நிறுவனத்தின் 2018/2019 சுத்திகரிப்பு சேவை பெறுகை நடைமுறைக்கு புறம்பாக அதிகார சபையின் பாதுகாப்பு சேவையில் ஈடுபட்டிருந்த தனியார் நிறுவனத்தின் முகாமைததுவத்தின் கீழ் உள்ள வேறு நிறுவனத்திடம் வழங்கப்பட்டு ரூபா. 7,155,761 ஆன கொடுப்பனவு மேற்கொள்-ளப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்கையில் பெறுகை நடைமுறைகளை பின்பற்றுதல் வேண்டும். |
| (ஆ) 2006 பெறுகை வழிகாட்டல் கைந்நூலில் 2.14.1 பிரிவு மற்றும் 2017 மார்ச் 15 ஆந் திகதிய 33 ஆவது மேலதிக அறிவுரைபடி திணைக்களத்து கொள்வனவு குழுவின்கீழ் திறந்த போட்டியுடன்கூடிய கொள்வனவு திட்டம் பின்பற்றப்பட வேண்டிய ரூபா. 50,211,231 ஆன கொள்வனவு தொடர்பில் பெறுகை வழிகாட்டல் கோவையில் 4.4.2பந்திக்கு புறம்பாக கொள்வனவுகளை பகுதியாக்கப்பட்டு (Slicing) சந்தையில் வாங்கும் முறை பின்பற்றப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்கையில் பெறுகை நடைமுறைகளை பின்பற்றுதல் வேண்டும். |

## 3.6 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதி 71 இன்கீழ் ஏற்பாடுகளுக்கு முரணாகவும் 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் 07 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத கருத்திட்ட கூட்டிணைப்பாளர் பதவியாக புதிய பதவிப் பெயரை உருவாக்கி 04 அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்து 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை ரூபா. 1,350,119 ஐ திறன் துறைசார் அபிவிருத்தி கருத்திட்ட நிதியம்மூலம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | தொடருடன்கூடிய ஒழுங்குவிதிகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |